## களபூமி கலையகத்தின் அத்திவாரக்கல் நாட்டு விழா 14-11-2018 (புதன்கிழமை) காலை இனிதே நடைபெற்றது.

களபூமி கலையகத்தின் போஷகர் திரு வேலுப்பிள்ளை முருகமூர்த்தி அவர்களின் தலைமையில் விழா ஆரம்பமாகியது. அவ்வேளையில் ஆதவன் தலை காட்டத் தொடங்கவில்லை. ஆனாலும் அவன் தன் வெப்பக் கதிரினை வீசி புல்லின்மேல் தூங்கும் பனிநீரினை விலக்கியதுடன் ஒளியினையும் வெளிக்கொணர்ந்து விழா சிறப்புற நிகழ்வதற்கு அனுகூலமாகவிருந்தான்.

இத்தினத்திற்கு முதல் நாள் சூரன் போர் கொண்டாடியமையினாலும் அதிகாலை என்ற காரணத்தினாலும் எதிர் பார்த்த அளவு மக்கள் வருகை தரவில்லை. இருந்தும் இக்கலையகம் வளர்ந்து ஊர் மக்களுக்கு சேவை செய்யும் என்ற நம்பிக்கையுடன் வருகை தந்த மக்கள் வாழ்த்திச் சென்றனர்.

கலையகம் ஒரு தனி மனிதனின் முயற்சியல்ல, இது ஊர்மக்களுக்காக, ஊர் மக்களின் பங்களிப்பும் ஒத்துழைப்பும் கலந்து உருவாகும் ஓர் அமைப்பாகும். கடந்த ஐந்து வருடங்களாகக் களபூமி வாழ் சிறார்களின் கலை கலாசாரத்தினை வளர்த்து வரும் இக்கலையகம் மேலும் முன்னேற்றப் பாதையில் செல்லும் என்ற நோக்குடன் பலர் உதவ முன்வந்துள்ளனர். அவர்களுக்கு எமது advanced நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

இதுவரை நிர்மாணப்பணிக்கு நிதியும் ஒத்துழைப்பும் வழங்கியுவர்களுக்கு மாத்திரமன்றி தொடர்ந்தும் நிதியுதவி வழங்க முன்வந்துள்ள நல்லுங்களுக்கும் மற்றும் விழர சிறப்புற நடைபெற உதவிய அன்பர்களுக்கும் எமது நன்றி கலந்த பாராட்டுக்களை இத்தருணத்தில் தெரிவிக்கின்றோம்.

இங்ஙனம்

களபூமி கலையக நிர்வாகம்